JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 59 |
| NAME | : | சுரேஷ்குமார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.03.2026

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி ஜெகதீஸ்வரன் என்பவரை தெரியும். அவர் கொரோனா காலக்கட்டத்தில் இறந்துவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 7-8 வருடங்களுக்கு முன்பு மாலை நேரத்தில் போலீசார் மாயவன் கோவிலுக்கு வந்தார்கள். சீட்டு பிரித்த வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டார்கள். அதில் சாட்சியாக நானும், ஜெகதீஸ்வரனும் கையெழுத்து செய்தோம். மேற்படி பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் படம் வரைந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள். எந்த மாதம், தேதி, வருடம் என்று நினைவில்லை. எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் நியாபகம் இல்லை. ஜீப்பில் வந்தார்கள். என்னை விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கியது ஆண் போலீஸ். நான் மாயவன் கோவிலின் வரி தாரரா என்றால் இல்லை. அந்த கோவில் எங்கு பார்த்து உள்ளது என்றால் கிழக்கு பார்த்து உள்ளது. அந்த ஊரில் எத்தனை வருடமாக நான் குடியிருக்கிறேன்

என்றால் நான் பிறந்து வளர்ந்தது அந்த ஊர்தான். சீட்டு பிரச்சனை சம்மந்தமாக படம் வரைந்ததாக யார் சொன்னார்கள் என்றால் போலீஸ் சொன்னார்கள். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. தெரியும் படித்து காண்பித்தார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்றால் 8 வருடம் ஆனதால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் வைத்து யாதொரு கையெழுத்தும் செய்திருப்பது கிடையாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை– இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC// 563/2024

: Prosecution P.W - 58

NAME : அற்புதஜெகன்பிரகாஷ்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.03.2026

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் என்பவரை தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் என்பவரை தெரியும். அசா.6 அருமைகிளியை தெரியும். அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி என்பவரை தெரியாது. அசா.9 பூங்கொடி சூசை தெரியும். அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி தெரியாது. அசா.12 பொன்பாண்டியை தெரியாது. அசா.13 சாந்தியை தெரியாது. அசா.14 குணசீலன் தெரியும். அசா.15 முத்துலெட்சுமி தெரியாது. அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் தெரியாது. அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியும், அசா.19 குமரேசன் தெரியாது. அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது. அசா.22 சுதா தெரியாது. அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியும். அசா.25 ஜானகி தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியும். அசா.27 தெய்வகனியை தெரியாது. அசா.28 செல்வன் தெரியாது. அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும். அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும். அசா.31 அன்னபூரணியை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியாது. அசா.34 வசுமதி தெரியாது. அசா.35 இருளப்பன் தெரியாது. அசா.36 முருகன் அசா.37 கெலன்

ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியாது. அசா.40 புஷ்பவள்ளி தெரியாது. அசா.41 விஜய் தெரியாது. அசா.42 சரோஜா தெரியும். அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியுயாது. அ.சா.49 மூக்கம்மாள் தெரியாது. அசா.50 முருகன் அசா.51 ஐயப்பன் அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி தெரியாது. அசா.54 குமார் தெரியாது. அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியாது. அசா.56 திருமலை என்பவரை தெரியாது. அசா.57 மரிய அருள்ராஜன் என்பவரை தெரியும். மாயன்கோவிலில் மகேஷ் மாயவன் சீட்டு பிரித்தார் அவரிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மகேஷ் மாயவன் பணம் எதுவும் தரவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது 2010ம் வருடத்திலிருந்து ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் 61 ஆயிரம் சீட்டில் 5 சீட்டுகள் ஆஜர் எதிரிகளிடம் போட்டிருந்தேனா என்றால் இல்லை. மகேஷ் மாயவனிடம்தான் போட்டிருந்தேன். காவல் நிலையத்தில் மகேஷ் மாயவன் பணத்தை தரவில்லை என புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மகேஷ் மாயவனிடம் சீட்டு போடவில்லை என்றாலும், எதிரிகளிடம்தான் சீட்டு போட்டேன் என்றாலும் பணத்தை திரும்பி நான் எதிரிகளிடம் இருந்து வாங்கிக்கொண்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi